# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 10 வியாழன் 26.08.2021 மலர் - 2, இதழ் - 142


## வளர்ச்சியில் பாரதம்



விஜயபாரதம்

குஷ்மேன் & வேக்ஃபீல்டின் 2021 அறிக்கையின்படி, உலகளாவிய உற்பத்தி இடர் குறியீட்டில் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி பாரதம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதில் வழக்கம்போல சீனா முதல் இடத்தில் உள்ளது. அமெரிக்கா 3ம் இடத்தை பெற்றுள்ளது. கொரோனா தொற்றுநோயின் தாக்கம் ஒட்டுமொத்த உலகையும் உலுக்கிவிட்டது. பாரதமும் அதில் இருந்துத் தப்பவில்லை. எனினும், அந்த சூழலைப் பயன்படுத்தி பாரதம் ஒரு உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்து உலக அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. பாரதத்தின் இந்த வளர்ச்சிக்குக் காரணமாக, பாரதத்தின் மக்கள் தொகை, அதில் புதுமையான திறன்களைக் கொண்ட இளைஞர்களின் எண்ணிக்கை, தொழில் உற்பத்திக்கு சாதகமான அரசியல் சூழல், நிலையான நிர்வாகம், வெளிப்படைத்தன்மை, ஊழலற்ற செயல்திறன் மிக்க அரசு, சாதகமான வணிகச் சூழல், வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசின் கொள்கைகள், வளர்ந்து வரும் உள்கட்டமைப்புகள், குறைக்கப்பட்ட கார்ப்பரேட் வரி, விநியோகச் சங்கிலித் திறன், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை போன்ற அரசின் திட்டங்கள், மலிவான நிலம், உழைப்பு, நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான விதிகள் தளர்வு, எளிய வருமான வரி, முன்னோடியான ஜி.எஸ்.டி வரிகள் போன்ற பல்வேறு காரணிகளும் பாரத்த்தின் இந்த பிரம்மாண்ட வளர்ச்சிக்கு காரணமாக உள்ளன. மேலும், உற்பத்தித் துறையில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் சாதனை படைத்த 'மேக் இன் இந்தியா' மற்றும் 'ஸ்கில் இந்தியா' போன்ற முயற்சிகளை அரசு அறிமுகப்படுத்தியது.

## இ - சஞ்சீவனி




விஜயபாரதம்


மத்திய அரசின் சுகாதாரத்துறை கடந்த வருடம் துவக்கிய இ சஞ்சீவனி என்ற இலவச தொலைதூர மருத்துவ சேவை இதுவரை ஒரு கோடி நோயாளிகளுக்கும் அதிகமாக சேவை செய்துள்ளது. இதன் வளர்ச்சி மாதத்திற்கு 1,000 மடங்கு என்ற அளவிலும் தினம்தோறும் 75,000 நோயாளிகளுக்கு ஆலோசனை என்ற அளவிலும் தொடர்கிறது. இதில் பயன்பெற்ற மாநிலங்களில் முதல் இடத்தில் 27.51 லட்சம் பயனாளர்களுடன் ஆந்திர பிரதேசமும், 19.39 லட்சம் பயனளிகளுடன் இரண்டாம் இடத்தில் கர்நாடகமும், தமிழகம் 14.76 லட்சம் பயனாளர்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

விஜயபாரதம்

# பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தல்

மத்திய அரசு கடந்த ஆண்டு செப்டம்பரில் புதிய வேளாண் சட்டங்களை கொண்டு வந்தது. இதனை வரவேற்ற பாரதிய கிசான் சங்கம், இதில் சில மாற்றங்களை பரிந்துரைத்தது. அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதனையொட்டி கருத்துத் தெரிவித்த பாரதிய கிசான் சங்க பொருளாளர் யுகல் கிஷோர் மிஸ்ரா, 'குறைந்தபட்ச ஆதரவு விலையை விவசாயிகளின் செலவின் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும். புதிய விவசாயச் சட்டங்களால் எழும் சர்ச்சைகளைத் தீர்க்க, விவசாயிகளின் கருத்துக்களை ஆராய்ந்து புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் செப்டம்பர் 8 அன்று நாடு தழுவிய அடையாள போராட்டம் நடத்தப்படும். அதன் பிறகும் எங்கள் கோரிக்கைகளை மத்திய அரசு பரிசீலிக்காவிட்டால், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து பின்னர் முடிவு எடுக்கப்படும். மோடி தலைமையிலான மத்திய அரசை ஆர்.எஸ்.எஸ் நடத்தவில்லை. அப்படியிருந்தால் எங்கள் அமைப்பு போராட்டத்தை நாட வேண்டிய தேவையில்லை. விவசாயிகளின் நலன் சார்ந்த பிரச்சினைகளில் மாநில அரசுகள் உட்பட யாரும் தீவிரமாக இல்லை' என கூறியுள்ளார்.

# வழிபாட்டுத் தலங்களில் தொடரும் தடை


விஜயபாரதம்

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வெள்ளி, சனி, ஞாயிற்று கிழமைகளில் வழிபாட்டு தலங்கள் மூடப்படுவதாக தமிழக அரசு முன்னர் அறிவித்திருந்தது. சமீபத்தில் புதிய தளர்வுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், வழிபாட்டு தலங்கள் குறித்து எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை. இதனால் மக்கள் குழப்பம் அடைந்திருந்தனர். இந்நிலையில், வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபாட்டுத் தலங்களுக்கான தடை தொடர்ந்து அமலில் இருக்கும் என தமிழக மருத்துவத்துறை தெரிவித்துள்ளது. பள்ளிகள் திறந்து ஒருவாரம் கழித்து கொரோனா தாக்கம் குறைந்தால் வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


விஜயபாரதம்

# இட ஒதுக்கீடு தடையில்லை

வன்னியர் உள்ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்து 20க்கும் மேற்பட்ட வழக்குகள், சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன. இதற்கு பதில் அளித்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம், வன்னியர்களுக்கு, 10.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க, எந்த தடையும் இல்லை. உள் ஒதுக்கீட்டால் யாருக்கும் பாதிப்பில்லை. அதனால், சட்டத்திற்கு தடை விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தது. இதனையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த இடைக்கால உத்தரவில் 10.5 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு தடை இல்லை. இட ஒதுக்கீட்டு சட்டத்தின் அடிப்படையிலான மாணவர் சேர்க்கை பணி நியமனங்கள் இறுதித்தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என தெரிவித்தனர். பின்னர், இவ்வழக்கை செப்டம்பர் 14க்கு ஒத்திவைத்தனர்.

# வாட்ஸ் அப்பில் தடுப்பூசி முன்பதிவு



விஜயபாரதம்

கொரோனா தடுப்பூசி போடுவதற்கு 'கோவின்' வலைத்தளம் மூலம் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. அதனை எளிமைப்படுத்தும் மேலும் விதத்தில் தற்போது வாட்ஸ் அப் மூலம் முன்பதிவு செய்யும் வசதியை மத்திய அரசு துவங்கி உள்ளது. இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்ட மத்திய சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா, 'வாட்ஸ் அப்பில் 'Book Slot' என்று டைப் செய்து மைகவ் இந்தியா கொரோனா உதவிமைய எண்ணான 919013151515 என்ற எண்ணுக்கு அனுப்ப வேண்டும். அதில் வரும் ஓ.டி.பி. எண்ணை பதிவு செய்து உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் கூறப்படும் வழிகாட்டுதல்களின்படி, கொரோனா தடுப்பூசி போடுவதற்கான நேரத்தை முன்பதிவு செய்யலாம்' என தெரிவித்துள்ளார்.

# ஏழைப்பெண்களின் கடன் தள்ளுபடி


விஜயபாரதம்

ஏழை பெண்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என தனது தேர்தல் அறிக்கையில் அசாம் மாநில பா.ஜ.க தெரிவித்திருந்தது. இதனையடுத்து, அங்கு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க தனது வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, தற்போது அங்குள்ள ஏழைப்பெண்கள், குறு நிதி நிறுவனங்கள் எனப்படும் தனியார் மைக்ரோ பைனான்ஸ் அமைப்புகளிடம் பெற்ற 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ளது. கடன் வழங்கிய 38 நிதி நிறுவனங்களுக்கு அந்த நிதியை அசாம் மாநில அரசே வழங்கும். முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா முன்னிலையில், இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அசாம் அரசின் நிதித்துறையும் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களும் கையெழுத்திட்டன. இதனால், 14 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் பயனடைவார்கள்.

# நில அபகரிப்பு புகாரில் தி.மு.க. எம்.எல்.ஏ

சென்னை சோழிங்க நல்லூரைச் சேர்ந்த உஷா என்பவர், சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு புகார் அளித்துள்ளார். அதில், 'சோழிங்கநல்லூர் தொகுதி தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷின் கார் ஓட்டுனர் ராஜா அவரது மனைவி லதா ஆகியோர் தங்கள் வீட்டை குறைந்த விலைக்கு கேட்டதாகவும் தர மறுத்ததால் மிரட்டல் விடுக்கின்றனர், தாக்குதல் நடத்துகின்றனர். இது குறித்து, செம்மஞ்சேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. எம்.எல்.ஏ அரவிந்த ரமேஷ் நேரில் வந்து வீட்டை தன் கார் ஓட்டுனருக்கு கொடுத்துவிட வேண்டும். மீறினால், நாங்களே காலி செய்துவிடுவோம் என மிரட்டினார். இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.


விஜயபாரதம்

# காங்கிரஸ் பஞ்சாயத்து

காங்கிரஸ் கட்சி ஆளும் பஞ்சாப், சத்தீஸ்கரில் அம்மாநில முதல்வர்களான அமரீந்தர்சிங், பூபேஷ் பாகல் ஆகியோருக்கு எதிராக கேபினட் அமைச்சர்களே போர்க்கொடி தூக்கியுள்ளனர். இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து இரு மாநில ஆட்சிகளையும் தக்க வைத்துக்கொள்ள பஞ்சாயத்து செய்வதில் படுபிசியாக உள்ளார் ராகுல் காந்தி.

பஞ்சாப், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் அடுத்த 6 மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் பணிகளில் மும்முரமாகிவிட்டன.

பஞ்சாப்பில் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவராக முன்னாள் கிரிக்கெட் வீரர் நவ்ஜோத்சிங் சித்து நியமிக்கப்பட்டார். இந்த முடிவை கடுமையாக எதிர்த்தார் முதல்வர் அமரீந்தர்சிங். இதற்காக, சோனியா, ராகுல், பிரியங்கா என ஒட்டுமொத்த குடும்பமே பல மாதங்களாக இருதரப்பினரையும் அழைத்து பஞ்சாயத்து செய்து ஒருவழியாக முடிவுக்கு கொண்டு வந்தனர். இப்போது, வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, அவரை மாற்ற வேண்டும் என அமரீந்தர்சிங்குக்கு எதிராக 4 அமைச்சர்கள் உட்பட 30 சட்டமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர்.

மற்றொரு புறம், சத்தீஸ்கர் மாநில முதல்வர் பூபேஷ் பாகலுக்கும் அக்கட்சியில் எதிர்ப்பு எழுந்துள்ளது. அவர் முதல்வராக பதவியேற்று இரண்டரை ஆண்டுகள் முடிந்துவிட்டது. சுழற்சி முறையில் முதல்வர் பதவி வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. அதன்படி அடுத்து நான்தான் முதல்வர் ஆவேன் என அடம் பிடிக்கிறார் டி.எஸ். சிங் தியோ. ஆனால், அப்படி எந்த ஒப்பந்தம் போடப்படவில்லை என்கிறார் முதல்வர் பூபேஷ் பாகல். இதனால் இருவரையும் அழைத்து பேசியுள்ளார் ராகுல்.

விஜயபாரதம்



# செல்வப் பெருந்தகையின் சொத்து



விஜயபாரதம்

நியூஸ் ஜே செய்தி தொலைக் காட்சியில் சமீபத்தில் வெளியான செய்தியில், காங்கிரஸ் எம்.எல்.ஏ. செல்வப்பெருந்தகையின் வாழ்க்கை சரிதம் குறித்த செய்தி வெளியானது. அதில், 'செல்வப்பெருந்தகை தனது அரசியல் பயணத்தை புரட்சி பாரதம் கட்சியில் துவக்கினார். பூவை மூர்த்தியால் ரிசர்வ் வங்கியில் பியூனாக வேலைக்கு சேர்ந்தார். ஆடிட்டர் பாண்டியன் கொலை வழக்கில் செல்வப்பெருந்தகையின் பெயர் அடிப்பட்டதால் அங்கிருந்து புதிய தமிழகம் கட்சியில் அடைக்கலம் ஆனார். சில நாட்களிலேயே இவரின் சுயரூபம் தெரியவந்ததால் விடுதலை சிறுத்தை கட்சிக்குத் தாவினார். 2001, 2006ம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் அவர் மீது மீது குண்டர் சட்டம் பாய்ந்தது. பின்னர் சட்டமன்ற தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஸ்ரீபெரும்புதூரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் தலைமைக்கு துரோகம் செய்ததால் வெளியேற்றப்பட்டார். பின்னர் பகுஜன் சமாஜ் கட்சி, காங்கிரஸ் என மாறி மாறி பச்சோந்திக்கு சமமாக வாழ்பவர். இவர் தற்போது லண்டனில் கல்லூரி ஒன்றை கட்டி வருகிறார். அதன் இயக்குனரில் ஒருவராக அவரது மனைவி உமையாள் பெயர் இடம் பெற்றுள்ளார். 30 ஆண்டுகளுக்கு முன்னர் ரிசர்வ் வங்கியின் பியூனாக இருந்த செல்வப்பெருந்தகைக்கு எப்படி லண்டனில் கல்லூரி கட்டுமளவிற்கு பணம் எங்கிருந்து வந்தது? என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# முடக்கப்படும் இருசக்கர வாகனத் திட்டம்



விஜயபாரதம்

சட்டசபையில் பேசிய அ.தி.மு.கவின் வேலுமணி, 3.09 லட்சம் மகளிர் பயன்பெற மானிய விலையில், இரு சக்கர வாகனம்; மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க, 'அம்மா இருசக்கர வாகன திட்டம்' 2018ல் துவக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து, கொள்கை விளக்க குறிப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்றார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் பெரியகருப்பன், பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இருசக்கர வாகன திட்டத்திற்கு வரவேற்பு இல்லை என தெரிவித்தார். இதுகுறித்து, பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், சட்டசபைக்கு வெளியே அளித்த பேட்டியில், பெண்கள் இரு சக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

# ஜல் ஜீவன் திட்டத்தில் முறைகேடு




விஜயபாரதம்

மத்திய அரசு, அனைத்து வீடுகளுக்கும் இலவசமாக குடிநீர் குழாய் அமைத்து சுத்தமான நீரைத்தர துவங்கப்பட்டதுதான் 'ஜல் ஜீவன்' திட்டம். முன்னோடியான சாதனை திட்டமான இதில் தமிழகத்தில் ஒரு வீட்டுக்கு 5 ஆயிரம் 15 ஆயிரம் என வசூலிப்பது, போலி ரசீதுகள் வழங்குவது என பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளன.

இந்நிலையில், குன்றத்தூர் ஒன்றியம், செரப்பணஞ்சேரி ஊராட்சியில் ஜல் ஜீவன் திட்டம் மூலம் ரூ. 3 கோடியே 27 ஆயிரம் மதிப்பில் பணிகள் செய்யப்பட்டன. ஆனால், ஒரு கோடி ரூபாய்க்கான பணிகள்கூட முறையாக நடைபெறவில்லை. கிணறுகள், போர்வெல் போன்றவை நிர்ணயிக்கப்பட்ட ஆழத்துக்கு எடுக்கப்படவில்லை. மேல்நிலை நீர்தேக்க தொட்டி தரமாக கட்டப்படவில்லை. அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஜி.ஐ. பைப்புகள், பிளாஸ்டிக் பைப்புகளை பயன்படுத்தாமல் தரமற்ற பைப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்ற புகார் எழுந்துள்ளது.

இதனை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், பொறியாளர் குழுவை அமைத்து விசாரிக்கவேண்டும் என்று அக்கிராமத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரிடம் புகார் அளித்துள்ளார். தமிழக அரசின் பட்ஜெட்டில், மத்திய அரசின் இந்த திட்டத்துக்கு தமிழக நிதியமைச்சர் தி.மு.க ஸ்டிக்கர் ஒட்டி அதற்கு 2,000 கோடி ஒதுக்கப்படும் என தெரிவித்தது தனிக்கதை.

# எம்.பி.யால் உயிரிழந்த காதலர்கள்



விஜயபாரதம்

உத்தரபிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த எம்.பியான அதுல் ராய் மீது இளம்பெண் ஒருவர் பாலியல் புகார் அளித்திருந்தார். இதனையடுத்து அதுல் ராய் காவல் துறையில் சரணடைந்தார். அவரை காவலர்கள் சிறையில் அடைத்தனர். இந்நிலையில், கடந்த 16ம் தேதி டெல்லி உச்சநீதிமன்றத்தின் வாயில் அருகே பாதிக்கப்பட்ட அந்த பெண் தனது காதலனுடன் தீக்குளித்தார். அவரது காதலன் கடந்த சனிக்கிழமையன்று உயிரிழந்தார். உயிருக்குப் போராடி வந்த அந்த பெண் செவ்வாய் கிழமையன்று உயிரிழந்தார். முன்னதாக அவர்கள் தங்களது முகநூல் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், சிறையில் அதுல் ராய்க்கு சலுகைகள் தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்த அவர்கள், எம்.பியோடு சேர்த்து உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த மூத்த ஐ.பிஎ.ஸ் அதிகாரிகள் மற்றும் ஒரு நீதிபதி மீதும் குற்றம்சாட்டி இருந்தனர்.


# உலகம் இயல்பு நிலைக்குத் திரும்புமா?



விஜயபாரதம்

கொரோனா 3வது அலை பரவ வாய்ப்பிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை ஒரு புறம், 3வது அலையால் குழந்தைகளுக்கு அதிக பாதிப்பு என்ற செய்திகள் ஒருபுறம் என மக்களை பயமுறுத்தி வருகிறது. உலகம் இயல்பு நிலைக்குத் திரும்புமா, முகக்கவசம் இல்லாமல் வெளியில் சுற்றமுடியாதா, வழக்கம்போல அந்த பழைய வாழ்க்கையை வாழ மாட்டோமா என்ற ஏக்கம் நமக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது. இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில், 'அடுத்த ஆண்டு இறுதிக்குள் உலகில் சுமார் 70 சதவீத மக்கள் தொகைக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட உடன் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்ப வாய்ப்புள்ளது. 2022 இறுதியில் நாம் அதனை அடைவோம். 3வது அலை பரவினால் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படலாம். ஆனால் அவர்களுக்கு அதனால் பெரிய பாதிப்பு இருக்காது. இருந்தாலும், குழந்தைகளுக்கான ஐசியூக்களை மருத்துவமனைகள் தயார் செய்வது நல்லது. சிறுசிறு ஏற்ற இறக்கங்களை மட்டுமே கண்டுவிட்டு நிரந்தரமாக இருக்கும் சூழலை எண்டமிக் என்பார்கள். பாரதத்தில் கொரோனா பாதிப்பு அந்த எண்டமிக் நிலையை எட்டி வருகிறது. பாரதத்தில் தயாரிக்கப்பட்ட கோவேக்சின் தடுப்பூசி தொடர்பான கூடுதல் தகவல்களை பாரத் பயோடெக் நிறுவனத்திடம் உலக சுகாதார அமைப்பு கோரியுள்ளது. அதன் காரணமாகவே அத்தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு ஒப்புதல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அடுத்த மாத இறுதிக்குள் கோவேக்சின் தடுப்பூசிக்கு ஒப்புதல் வழங்கப்பட வாய்ப்புள்ளது' என தெரிவித்தார்.

---



விஜயபாரதம்

# முன்னாள் எம்.எல்.ஏவுக்கு 25 ஆண்டுகள் சிறை

மேகாலயாவில் தேசிய பழங்குடியினர் விடுதலை கவுன்சில் என்னும் அமைப்பின் தலைவர் ஜூலியஸ் டார்பாங். இவர் மீது கடந்த 2007ம் ஆண்டு சிறுமி ஒருவர் பாலியல் பலாத்கார புகார் அளித்தார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், ஜூலியஸ் டார்பாங்கை கைது செய்தனர். 14 ஆண்டுகளுக்கு பிறகு, இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியானது. அதில், டார்பாங்கின் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 25 ஆண்டு கால சிறைத் தண்டனையை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. முன்னதாக, இவ்வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றபோதே சட்டசபை தேர்தலில் ஜூலியஸ் டார்பாங் பட்ஸ் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கத்திய ஊடகங்கள் மௌனம்




விஜயபாரதம்

பாரதம் கொரோனாவின் மோசமான இரண்டாவது அலையை எதிர்த்துப் போராடியபோது, இடதுசாரி எண்ணம் கொண்ட மேற்கத்திய ஊடகங்களும் நமது நாட்டில் உள்ள அதே சித்தாந்தம் கொண்ட ஊடகங்களும் பாரதத்தை உலக அளவில் அவமானப்படுத்தும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன.

அவை, இறுதிசடங்குகளை பூதாகாரமாகக் கண்பித்தன. கங்கையில் சடலங்கள் மிதக்கும் பழைய புகைப்படங்களை சமீபகால புகைப்படங்களாக சித்தரித்தன, நியூயார்க் டைம்ஸ் நாளிதழ், பாரதத்தில் கொரோனா இறப்பு எண்ணிக்கை 6 லட்சம் முதல் 42 லட்சம்வரை இருக்கும் என்று ஒரு பொய்யான கணிப்பை வெளியிட்டது.

இந்நிலையில், தற்போது அமெரிக்க அரசு அதன் மக்களுக்கு வேகமாக தடுப்பூசிகள் செலுத்தி வரும் நிலையிலும், அங்கு கொரோன வேகமாக பரவுகிறது. தினம்தோறும் 1.5 லட்சத்துக்கும் அதிகமான கொரோனா நோய்த்தொற்றுகள் கண்டறியப்படுகின்றன. கடந்த செவ்வாய் கிழமை மட்டும், 2.66 லட்சம் புதிய தொற்றுகள் கண்டறியப்பட்டன. மொத்தமுள்ள 50 மாகாணங்களில் 42ல் கொரோனா உயர்ந்து வருகிறது. 43 மாகாணங்களில் இறப்பு சதவீதம் அதிகரித்து வருகிறது.

இதுவரை, அமெரிக்கா கொரோனாவால் 3.8 கோடிக்கும் அதிகமான தொற்றுகளும் 6.3 லட்சத்துக்கும் அதிகமான இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2022 இலையுதிர்காலத்தில் கொரோனா அமெரிக்காவில் நல்ல கட்டுப்பாட்டில் இருக்கும் என்று முன்னர் கூறியிருந்த அமெரிக்காவின் முதன்மை சுகாதாரத்துறை நிபுணர் அந்தோனி ஃபாசி, தற்போது 'அதிக அளவில் மக்கள் தடுப்பூசி போட்டால், 2022 இலையுதிர்காலத்தில் கோரோனா மீது நல்ல கட்டுப்பாட்டை பெற ஆரம்பிக்கலாம்' என்று தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளார்.

பாரதம் அழிவுகரமான சூழலில் செல்கிறது என பயமுறுத்திய இதே ஊடகங்கள் தற்போது அமெரிக்காவின் சூழல் குறித்து வாய் திறக்காமல் மௌனம் காக்கின்றன.

# சர்ச்சையில் நீரஜ் சோப்ராவின் ஈட்டி



விஜயபாரதம்

பாரதம் சார்பில், ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா டைம்ஸ் ஆப் இந்தியாவுக்கு அளித்த பேட்டியில், அவர் தங்கம் வென்ற நாளில், தனது ஈட்டியை கண்டுபிடிக்க முடியாததால், சற்று பதட்டமாக இருந்ததை கூறினார். பின்னர், பாகிஸ்தானின் தடகள வீரர் அர்ஷாத் நதீம், தனது ஈட்டியுடன் நடமாடுவதை பார்த்து அதனை திரும்பப் பெற்று போட்டியில் பங்கேற்றதாகக் கூறினார். இதனால், முதல் சுற்று ஈட்டி எறிதலில் அவர் சற்று அவசரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது ‘ஒரு பாரத வீரரின் ஈட்டியை, பாகிஸ்தான் வீரர் கையில் வைத்துக்கொண்டு என்ன செய்தார்?’ என்று சமூக ஊடகங்களில் விவாதப் பொருளானது. ஏனெனில், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் போட்டிகளின்போது கிரிக்கெட் பந்தை சேதப்படுத்தியதாக பலமுறை குற்றம் சாட்டப்பட்டவர்கள். எனவே, பாகிஸ்தான் வீரரும், ஈட்டியை எதாவது செய்திருக்கலாம் என்ற அச்சம் நெட்டிசன்களிடம் இருந்தது.

எனினும் மற்றொரு கோணமாக, அரபு செய்தி நிறுவனம் ஒன்று, சமீபத்தில் வெளியிட்ட ஒரு கட்டுரையில், பாகிஸ்தான் அரசு, அந்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கான எந்த வசதிகளையும் செய்துத் தராதது குறித்து நதீம் புலம்பினார். பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்தின் மருத்துவத்துறை செயலாளர் டாக்டர் ஆசாத் அப்பாஸ் ஷா, பாரதக் குழு நன்றாக தயாராகி உள்ளனர். அவர்கள் விளையாட்டு உளவியலாளர், மருத்துவர்கள், அறுவை சிகிச்சை நிபுணர், இசைக்குழு என நன்றாக தயாராகி வந்திருக்கின்றனர். ஆனால் பாகிஸ்தான் வீரர்களிடம் அப்படி ஏதுமில்லை என கூறினார் என்பதையும் பதிவு செய்திருந்தது.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்


சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .
93613 99006

# வலையில் சிக்கிய மீம்கள்






# தமிழ் தென்றல் திரு.வி.க.




திருவாரூர் விருத்தாசலம் கல்யாண சுந்தரனார் எனப்படும் திரு. வி. க அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த்தென்றல் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம்(தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் சின்னம்மாவுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார்.

திரு வி க தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னை, ராயப்பேட்டையில் ஆரியன் தொடக்கப் பள்ளி, 1894ல் வெஸ்லி பள்ளியில் பயின்றார். அப்போது அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார். 1904ம் ஆண்டில் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

1906ம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கராகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்து விலகினார். 1909ல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். 1912ல் கமலாம்பிகையை மணம் புரிந்தார். இரண்டு குழந்தைகள் பிறந்தனர். 1918ம் ஆண்டிற்குள் தம் மனைவி, குழந்தைகளை இழந்து மீண்டும் தனியரானார். ராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்பதற்காக அப்பணியில் இருந்தும் விலகினார்.

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தார். திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். சென்னையில் பல நிறுவனங்களில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு, பல நூல்களை எழுதினார். தமிழ் தென்றல் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு வி கல்யாணசுந்தரம் 1953ம் ஆண்டு செப்டம்பர் 17ம் தேதி தனது எழுபத்தோராம் வயதில் காலமானார்.

# உலக நாய்கள் தினம்



விஜயபாரதம்

கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி செல்லப் பிராணிகள் வளர்ப்பில் நாய்களுக்குதான் எப்போதுமே முதலிடம். நம் அன்றாட வாழ்க்கையில் நாய்களின் பங்கினையும் அவற்றின் அன்பு மற்றும் விஸ்வாசத்தை பாராட்டவும், உலகெங்கிலும் உள்ள வீடற்ற, ஆதரவற்ற, துஷ்பிரயோகம் செய்யப்படும் நாய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இன்று சர்வதேச நாய்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

நாய் நன்றியுள்ளது மட்டுமல்ல பாதுகாப்பானது, தோழமையானது. குடும்பத்தில் அதுவும் ஒரு அங்கத்தினர் போல. வீட்டில் எத்தனைவிலங்குகள், பறவைகள் வளர்த்தாலும் நாய்க்கு மட்டும்தான் நம்முடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. பலருக்கு நாய் என்றால் உயிர், சிலருக்கு பயம், அனைத்திற்கும் நம் மனநிலை தான் காரணம். செல்ல பிராணிகளுடன் வசிப்பவர்களுக்கு மன அழுத்தம் அதிகம் உண்டாகாது என்கின்றனர் மனோதத்துவ நிபுணர்கள்.

உலகம் முழுவதும் நாய்கள் இருந்தாலும் அவை பார்ப்பதற்கு ஒன்று போல் இருந்தாலும் தோற்றத்தில் பல்வகை வேறுபாட்டுடன் காணப்படுகின்றன. அவற்றின் தோற்றம், எடை, நிறம், உயரம், பண்புகள், நடத்தைகளை சான்று வழங்கும் உலகளாவிய அமைப்பான 'கென்னல் கிளப்', 350 நாய் இனங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்வேறு வகைகளான நாய் இனங்கள் இருந்தாலும், அவற்றினை தோழமை நாய்கள், பாதுகாவல் நாய்கள், வேட்டை நாய்கள், பணி நாய்கள், வேட்டை மீட்டெடுப்பு நாய்கள் என ஐந்து காரணங்களுக்காக வளர்கின்றனர்.

நாட்டு மாடுகளைப் போன்று நமது பாரம்பரியத்தோடு ஒன்றியவை நாட்டு நாய்கள். ராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை, கன்னி போன்ற நாட்டு நாய்கள் பண்டைய காலத்தில் இருந்தே மனிதர்களுக்கு உதவியாக இருந்துள்ளன. தற்போது வெளிநாட்டு நாய்களை வளர்க்கும் ஆர்வம் நமது நாட்டில் அதிகரித்துள்ளது. நாட்டு நாய் வளர்ப்பில் ஆர்வம் குறைவதால் அந்த இனங்கள் மெல்ல அழிந்து வருகின்றன. ஆனால், வெளிநாட்டு நாய்களைவிட அனைத்து விதத்திலும் பன்மடங்கு சிறந்தவை, அதிகம் செலவில்லாதவை நமது நாட்டு நாய் இனங்கள். இது குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க, மத்திய அரசின் முயற்சியால் நமது பாதுகாப்புப் படைகள், இவற்றை தனது பணிகளுக்காக பயன்படுத்தத் துவங்கியுள்ளது. நாமும் நாட்டு நாய் இனங்களை வளர்ப்போம், நம் தெருவில் கேட்பாரற்று உள்ள நாய்களையும் அரவணைப்போம்.